**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| OS.No. 53/2023 | Date : 16.06.2026 | DW 1 |
| --- | --- | --- |
| Name: கண்ணன் | த/பெ.அய்யண்ணன் | |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதி சீனிவாசன் தாவாவில் இரண்டு சொத்துக்களை காண்பித்துள்ளார் என்றால் சரிதான். முதல் அயிட்ட சொத்து வாதியின் நிலத்திற்கு தெற்கேயும் கிழக்கேயும் அமைந்துள்ளது என்றால் சரிதான். கோவில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண். 41/2F யில் உள்ளது. மேற்படி கோவில் குடும்ப கோவில் என்றால் சரியல்ல. குடும்ப கோவில் இல்லை என்று ஆட்சேபணை செய்து பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த கோவிலில் நாங்கள் அனைவரும் கும்பிடுகிறோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கும்பிடுவேன். நான் ஊரிலேயே இல்லாததால்தான் நான் அந்த கோவிலில் வழிபடவில்லை என்றால் சரியல்ல. முதலில் நான் கோவில் உள்ளது என்று சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3000 சதுர அடி நிலத்தை கோவிலுக்கு என்று தனியாக ஒதுக்கி கொடுத்துள்ளேனா என்றால் நான் கொடுத்துள்ளேன். அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.40/1 முதல் அயிட்டசொத்துக்கு தெற்கு புறமாக உள்ளது. 2 வது அயிட்ட சொத்தான சர்வே எண்.40/1 க்கு சீனிவாசன் நிலத்திற்கு சம்மந்தப்பட்டது இல்லை. ஆரம்ப கால கட்டத்தில் இருந்தே நானும் என் குடும்பமும் பணி நிமித்தமாக வேறு ஊர்களில்தான் இருந்தோம் என்றாலும் கடைசியாக நான் சேலத்தில் பணி ஓய்வு பெற்றேன் என்றும் நான் நிலங்களை பார்க்கவில்லை என்றாலும் எனக்கு தாவா சொத்து குறித்து விவரம் எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. சீனிவாசனுக்கும் எனக்கும் என் தகப்பனாரிடமிருந்து வந்த சொத்து என்பதால் தாவா சொத்தை வாங்குவதற்கு சீனிவாசனுக்குமுன்னுரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் மூன்றாவது நபர்களான இடைத்தரகர்கள் மூலமாக 3ம் நபருக்கு விற்பனை செய்வதற்கு முயற்சி செய்து வருகிறேன் என்றாலும் அதை கேள்விப்பட்ட வாதி தாவா சொத்தை வாங்குவதாக என்னிடமே கூறினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் முன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்து விட்டால் வாதிக்கு நிலத்தில் உள்ள முனியப்பன் சாமியை வழிபடமுடியாமல் போய்விடும் என்றாலும் அவருக்கு உரிமை அற்றுவிடும் என்பதாலும் தாவா சொத்தை வாங்குவதற்கு முதல் உரிமையும் முன்னுரிமையும் வழங்கவேண்டும் என்று சொன்னால்

சரியல்ல. தாவா சொத்து காலதோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்று சொன்னாலும் வாதிக்கு வாங்குவதற்கு முழுஉரிமை உள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. என் பெயரில் உள்ள அசல் ஆவணங்களை நான் ஒப்படைக்காததற்கு தனிப்பட்ட காரணம் ஏதாவது உண்டா என்றால் இல்லை. அசல் பத்திரத்தை நான் நில தரகர்களிடம் கொடுத்து முன்பணம் பெற்றுள்ளேன் என்பதால்தான் நான் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தை வாங்குதற்கு அனைத்து உரிமைகளும் உள்ளது என்றாலும் அவர் நியாயமான காரணத்திற்காகதான் தாவா தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—கண்ணன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.